# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

## வட்டாட்சியர் அலுவலகம், கீழக்கரை, இராமநாதபுரம் மாவட்டம்

நாள்: .10.2025.

அறிவிக்கை எண்.: அ3/2467/2025

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டத்தில் காலியாக உள்ள 02 (இரண்டு) கிராம உதவியாளர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் செய்வதற்காக இவ்வலுவலக அறிக்கை எண்01/2025 நாள்.08.08.2025-ன்படி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்நேர்வில் தற்போது அதிகபட்ச வயது வரம்பு தளர்வு செய்து தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.(குறிப்பு . இவ்வலுவலக அறிக்கை எண் 01/2025 நாள்.08.08.2025-ன்படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள தற்போது விண்ணப்பிக்க தேவையில்லை)

அ) விண்ணப்பம் செய்வதற்கான கடைசி நாள்.21.10.2025 மாலை 5.45 மணிவரை

ஆ) ஊதிய விகிதம் . சிறப்பு காலமுறை ஊதியம் -ரூ.11,100 -35100/-

2.விண்ணப்பிக்க தகுதிகள்

1. கல்வித்தகுதி . தமிழ்நாடு அரசு தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC - Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (தேர்ச்சி/தோல்வி) (குறிப்பு ((SSLC - Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்)

2. வயது 01.07.2025 அன்று

| வ.எண் | பிரிவு | குறைந்த பட்ச வயது வரம்பு | அதிக பட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1 | இதர பிரிவினர் -பொதுப்பிரிவினர் | 21 | 32 |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /சீர்மரபினர்/பிற்பட்ட வகுப்பினர்/பிற்பட்ட வகுப்பினர்(முஸ்லீம்) | 21 | 39 |
| 3. | அட்டவனை வகுப்பினர்/அட்டவனை வகுப்பினர் (அருந்ததியினர்/பழங்குடியினர்/ஆதரவற்ற விதவை (எந்த பிரிவினராக இருந்தாலும்) | 21 | 42 |

குறிப்பு.

I) மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்ச வயது வரம்பு 10 ஆண்டுகள் கூடுதல் தளர்வு வழங்கப்படும்

II) முன்னாள் இராணுவ பொதுப்பிரிவினருக்கு அதிகபட்சம் 50 வயதும் இதர பிரிவினருக்கு 55 வயதும் வழங்கப்படும்.

3.பணியிடம் காலியாக உள்ள கிராமம் /வட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

4. தேர்வு முறை

1. மிதிவண்டி/இருசக்கர வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதும் திறன்
2. நேர்காணல்

5.காலிப்பணியிடங்கள்:02

நிரப்பப்படவுள்ள கிராமங்களின் விபரம்:

| வ. எண். | நிரப்பப்பட உள்ள கிராமத்தின் பெயர் | இன சுழற்சி எண் | இன சுழற்சி விபரம் |
|---|---|---|---|
| 1 | பனைக்குளம் | 10 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் தவிர) (பொது) (முன்னுரிமை அற்றவர்) |
| 2 | எக்ககுடி | 11 | பொதுப்போட்டி (பொது) (முன்னுரிமை அற்றவர்) |

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | 07.10.2025 |
| விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | 21.10.2025 |
| வாசிப்பு மற்றும் எழுத்து திறன் தேர்வு நடைபெறும் நாள் | 08.10.2025 |
| விண்ணப்பங்களை பரிசீலனை செய்து முடிக்க வேண்டிய நாள் | 31.10.2025 |
| Reading and Writing Skill Test | 21 Days from the despatch of letters to ensure that communication reaches all eligible applicants |
| நிரப்பப்பட உள்ள பணியிடங்கள் எண்ணிக்கை | 02 |

- **இதர தகுதிகள்**
  - விண்ணப்பதாரர் கீழக்கரை வட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்
  - தமிழில் பிழையின்றி எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்
  - கிராம உதவியாளர்கள் நியமனம் தொடர்பாக, அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.312 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி 8(1)) துறை, நாள் 04.06.2025-இல் தெரிவிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி உரிய கல்வித்தகுதி, மிதிவண்டி / இரு சக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன், வசிப்பிடம் (Native Resident) நேர்காணல் ஆகியவற்றிற்கு தனித்தனியே மதிப்பெண்கள் வழங்கப்பட்டு ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் தரவரிசைப்பட்டியல் தயார் செய்யப்பட்டு காலிப்பணியிடங்களுக்கு பணிநியமனம் செய்யப்படும்.
  - இருசக்கர மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பின் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியாக தேர்வு நடத்தப்படமாட்டாது. மாறாக இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லையெனில் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியே தேர்வு நடத்தப்படும்.
  - பணி நியமனத்தின்போது உடல் தகுதிச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்.
  - இருதார மனைவி உடையவர்களாக இருக்க கூடாது மற்றும் வேறு கணவர் மனைவி உயிருடன் உள்ள ஒருவரை திருமணம் செய்திருக்க கூடாது.
  - பரிசீலனையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
  - நேர்முக தேர்வின் போது சான்றுகள் சரிபார்ப்பின் போதும் அசல் சான்றுகள் / ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

- **விண்ணப்பிக்கும் முறை**
  - விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை https://ramanathapuram.nic.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
  - விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமீபத்திய புகைப்படத்தினை (கடவு சீட்டு அளவு) விண்ணப்பத்தில் ஒட்டி உரிய ஆவணங்களுடன் கீழக்கரை வட்டாட்சியர்

அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கடைசி நாளான 21.10.2025 அன்று மாலை 05.45 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(குறிப்பு:விண்ணப்பதார்கள் விண்ணப்ப படிவங்களை https:/ramanathapuram என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கிராம உதவியாளர் பணிக்காக ஏற்கனவே கடந்த 08.08.2025 நாளிட்ட விளம்பரத்தின் அடிப்படையில் விண்ணப்பம் செய்த நபர்கள் மீண்டும் **விண்ணப்பிக்க தேவையில்லை**. மேற்படி நபர்கள் ஏற்கனவே அளித்த விண்ணப்பங்கள் **மீண்டும்** பரிசீலனைக்காக எடுத்துக்கொள்ளப்படும்)

6.10.25

வருவாய் வட்டாட்சியர்,
கீழக்கரை வட்டம்,

6/10/25